

# TIST

May 2006



**Plant a Fruit tree this monsoon; your grandchildren maybe grateful**

# CHEZHUMAI ©

## TIST in new villages at Kodungalur

TIST had an introduction meeting at Kavedu, a village at Kodungalur Center on 09.04.2006. There were more than 20 participants from the village. TIST officials explained the procedure to the participants to join with TIST. Very soon, there will be yet another meeting at Kavedu for recruiting the villagers as Small Groups under TIST Program, before which, TIST Officials will make a sight visit of all the land in which tree planting work would be carried out by the new Small Groups of Kavedu.

**இந்த மழை காலத்தில் பழ மரங்களை பயிரிடுங்கள் உங்கள் பேரப்பிள்ளைகள் நன்றியுடன் உந்ளை நினைகூறுவார் கள்.**

# செழுமை ©

## கொடுங்கலூரில் உள்ள புதிய கிராமங்களில் டிஐ.எஸ்டி

டிஐ.எஸ்டி கொடுங்கலூரை மையமாக கொண்ட காவேடு கிராமத்தில் அறிமுக கூட்டத்தை **9.4.2006** அன்று நடத்தினார்கள். இந்த கிராமத்திலிருந்து இருபதிற்கும் மேற்ப்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள். டிஐ.எஸ்டி அலுவலர்கள் டிஐ.எஸ்டியில் அங்கத்தினராகும் முறையை விளக்கினார்கள். கூடிய விரைவில் காவேடு கிராமத்தில் இன்னொரு கூட்டம் நடைபெறும். அதில் கிராமாத்தினர் டிஐ.எஸ்டியின் அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டு சிறு குழுக்களாக அமைக்கப்படுவார்கள். இந்த நிகழ்விற்க்கு முன் டிஐ.எஸ்டி அதிகாரிகள் காவேடு கிராமத்தில் உள்ள நிலங்கனள பார்வையிடுவார்கள்.

**TIST**

**The International Small Group & Tree Planting Program**

**TIST India** : New No.52, Guru Ram Flats, Flat D, Venkat Ratnam Nagar, Adyar 600 020. Phone : 044 24411637, Mobile : 9840299822, Web: www.tist.org
**TIST USA** : Phone : 001 9188511917 Email : rameshn@tist.org

TIST requests all the existing Members/Small Groups to find if they have any of their friends / relatives at Kavedu, if so, inform them to join with TIST during the recruitment meeting as Small Groups and get benefited and make use of the excellent opportunity.



டிஐ.எஸ்டி அதன் அங்கத்தினர்களிடம் காவேடு கிராமத்தில் அவர்களுக்கு நண்பர்களோ அல்லது உறவினர்களோ இருக்கிறார்களா என்று தெரிந்து கொள்ளுமாறு கூறுகிறார்கள். அப்படி தெரிந்தவர்கள் இருப்பின் அவர்களை டிஐ.எஸ்டியின் சிறு குழுக்களோடு சேர்ந்துகொண்டு பயனடையுமாறு கேட்டு கொள்கிறார்கள். இவ்வாறு சிறு குழுக்களோடு சேர்ந்துகொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பாகும்.

## Log Book Maintenance

Every Small Group should maintain a Log Book, wherein they should maintain all their details pertaining to TIST activities, like each families tree/seedling/grove details should be made a record on weekly / monthly basis. Minutes of their Small Groups meeting should be recorded. The Log Book should be brought to the Node Meeting along with their SGMR. Sakthi and Nila Small Groups of Sokandi Village are maintaining their Log Book very neatly and updating the data regularly. Certainly, there are few other Small Groups who are maintaining a Log Book, but they all need to maintain it neatly and regular updates should be done.



Kavedu Meeting / காவேடு கூட்டம்

## குறிப்பேடு பராமரித்தல் (லாக் புக்)

ஒவ்வொரு சிறு குழுவும் குறிப்பு புத்தகம் ஒன்றை பயன்படுத்தவேண்டும். அதில் டிஐ.எஸ்டி தொடர்புடைய எல்லா விவரங்களையும் குறித்து வைக்க வேண்டும். மரங்களின் இன வகைகள், விதைநாற்றுகள், தோப்புகளின் விவரம் போன்றவை வாராந்திர அல்லது மாதாந்திர அடிப்படையில் குறிப்பேட்டில் பதிவு செய்ய வேண்டும். சிறு குழுக்களின் கூட்டத்தில் எடுக்கும் முடிவுகள் மற்றும் ஆலோசனைகளையும் குறித்துகொள்ள– வேண்டும். நோடு கூட்டத்தில் கலந்து கொள்ள வரும்பொழுது எஸ்ஜிஎம்ஆர் (SGMR) மற்றும் குறிப்பேடு (லாக் புக்) இவற்றை தவறாமல் எடுத்துவர வேண்டும். சொக்கண்டி கிராமத்தை சார்ந்த சக்தி மற்றும் நிலா சிறு குழுக்கள் தங்களின் குறிப்பேட்டை மிக அழகாக பராமரித்து அதில் எல்லா நிகழ்வுகளையும் குறித்து வைத்துள்ளார்கள். வேறு சில குழுக்களும் குறிப்பேடு பயன்படுத்துகிறார்கள் ஆனால் அவர்களும் விவரங்களை நாள் தவறாமல் குறித்து குறிப்பேட்டை கவனத்துடன் பராமரிக்க வேண்டும்.

## Sakthi and Small Group – Log Book Maintenance / சக்தி மற்றும் நிலா சிறு குழுக்கள் – குறிப்பேடு பராமரித்தல் (லாக் புக்)



## What happened to the man who killed the duck that hatched golden eggs?

A man who had a duck that hatched a golden eggs every day became too greedy one day and thought that instead of getting one golden egg every day, it would be nice to get lot many golden eggs by tearing the ducks stomach. What happened? The duck died and man was left with nothing.

We see few members selling their land. Our question is that, what will happen to your children and grandchildren, who will be left with no land like the man who killed the duck that hatched golden eggs? Just having hundred rupee note in your pocket will not serve your purpose, you will have to use the hundred rupee effectively, so that, it serves your purpose. Same way, the land that you own should be used effectively. Don't miss your opportunities in the TIST Program As a participant in the TIST program, you have the opportunity to join with some of your neighbors to improve your life and your income, change the landscape in your village and improve the environment! Are you making the most of all the opportunities and benefits TIST offers to you and to your Small Group?

Kandoor Node / காந்தூர் நோடு




## பொன் முட்டையிடும் வாத்தை கொன்றவனின் கதி என்ன ஆனது ?

பொன் முட்டையிடும் வாத்தை வைத்திருந்த ஒருவன் அந்த வாத்து ஒரு நாளைக்கு ஒரு முட்டைதான் இடுகிறது ஆனால் அதை வெட்டி அதன் வயிற்றை கிழித்தால் பல பொன் முட்டைகள் கிடைக்கும் என்ற எண்ணத்தினால் அதனை கொன்றான் என்ன ஆனது ? வாத்து இறந்துவிட்டது. இவனுக்கு எதுவும் இல்லாமல் ஆயிற்று.

சில அங்கத்தினர் தங்களின் நிலத்தை விற்கிறார்கள். நாம் அவர்களிடம் கேட்கும் கேள்வி என்னவென்றால், இவர்கள் இருக்கும் நிலத்தை விற்றால், இவர்களின் பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளின் நிலைமை பொன் முட்டையிட்ட வாத்தை கொன்றவனின் கதி தான் ஏற்படும். இவர்களிடம் நிலம்கூட இல்லாமல் ஒன்றும் இல்லாதவர்கள் ஆகிவிடுவார்கள். உங்கள் சட்டைப்பையில் ஒரு நூறு ரூபாய் இருந்தால் மட்டும் உங்களுக்கு அது உதவாது. அந்த நூறு ரூபாயை பயனுள்ள விதத்தில் செலவிடுவதால் மட்டுமே பயனடைவீர்கள். இது போல தான் நிலமும். நிலத்தை பயனுள்ளதாக மாற்றவேண்டும். ஆகவே டிஐஎஸ்டி அளிக்கும் வாய்ப்புகளை தவறவிடாதீர்கள். டிஐஎஸ்டி நிகழ்வுகளில் பங்கு கொள்வதின் மூலம் நீங்கள் உங்கள் அக்கம்பக்கத்து வீட்டாருடன் சேர்ந்து உங்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதோடு, உங்களின் வருமானத்தையும் உயர்த்திக்கொள்ளலாம். கிராமத்தின் சுற்றுப்புறத்தை சீரமைத்து கொள்ளலாம். டிஐஎஸ்டி அளிக்கும் வாய்ப்புகளை நீங்களும் உங்கள் சிறு குழுவும் நன்றாக பயன்படுத்தி பலன் அடைகிறீர்களா ?

## What to do before May-June 2006 Voucher Payment?

1. Small Groups who have single kind of species should immediately start different variety of seedlings
2. If your groves are not quantified, tell your quantifier to quantify them immediately
3. Small Groups who have not signed the GHG should immediately meet the TIST Officials in the Node and sigh the GHG
4. Small Groups who have not given their land detail proof should immediately give it to the TIST Officials
5. Small Groups who have missed out to give SGMR in the past for one or two months should give it immediately to the TIST Officials. Once the voucher is generated, than it is difficult to add SGMR reports for the past months, which will affect the voucher payment

## மே – ஜீன் 2006 வவுச்சர் பேமென்ட் பெறும் முன் செய்ய வேண்டியது என்ன ?

1. ஓர் இன வகை மரங்கள் உள்ள சிறுக்குழுக்கள் உடனடியாக பல இனவகை விதைநாற்றுகளை பயிர்செய்ய வேண்டும்.
2. உங்கள் தோப்புகள் ஆய்வு செய்யப்படவில்லை என்றால் உடனே உங்களின் ஆய்வானரை ஆய்வு செய்யுமாறு கேட்டு கொள்ளுங்கள்
3. ஜிஎச்ஜி (GHG) யில் கையெழுத்திடாதவர்கள் உடனடியாக டிஐஎஸ்டி அதிகாரிகளை றோடு கூட்டத்தில் சந்தித்து ஜிஎச்ஜியில் கையெழுத்திடவும்.
4. தங்கள் நிலத்தைப்பற்றிய விவரங்கள் தக்க சான்றுகளுடன் சமர்ப்பிக்காதவர் சிறுகுழுக்கள் உடனடியாக நில விவரங்களை டிஐஎஸ்டி அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கவும்.
5. எஸ்ஜிஎம்ஆர் கடந்த மாதங்களில் கொடுக்காத சிறுகுழுக்கள் உடனடியாக டிஐஎஸ்டி அதிகாரிகளிடம் கொடுக்கவேண்டும். வவுச்சர் தயாராகிவிட்டால், அதன் பின் கடந்த மாதங்களுக்கான எஸ்ஜிஎம்ஆர் ஆய்வு அறிக்கைகளை சேர்க்க இயலாது. இது வவுச்சர் பேமெண்ட்டை பாதிக்கும்.

Chittoor Node / சித்தூர் நோடு




Kodungalur Node




கொடுங்கலுரில் நோடு

Kattiampandal Node




கட்டியம்பந்தல் நோடு

## Tamarind Tree

The tamarind, a slow-growing, long-lived, massive tree reaches, under favorable conditions, a height of 80 or even 100 ft (24-30 m), and may attain a spread of 40 ft (12 m) and a trunk circumference of 25 ft (7.5 m).

The tree tolerates a great diversity of soil types, from deep alluvial soil to rocky land and porous, oolitic limestone. It withstands salt spray and can be planted fairly close to the seashore.

Tamarind seeds remain viable for months, will germinate in a week after planting. In the past, propagation has been customarily by seed sown in position, with thorny branches protecting the young seedlings. However, today, young trees are usually grown in nurseries. And there is intensified interest in vegetative propagation of selected varieties because of the commercial potential of tamarind products. The tree can be grown easily from cuttings, or by shield-budding, side-veneer grafting, or air-layering.

Nursery-grown trees are usually transplanted during the early rainy season. If kept until the second rainy season, the plants must be cut back and the taproot trimmed. Spacing may be 33 to 65 ft (10-20 m) between trees each way, depending on the fertility of the soil. With sufficient water and regular weeding, the seedlings will reach 2 ft (60 cm) the first year and 4 ft (120 cm) by the second year.

Sign the GHG agreement and take the Voucher payment.



ஜிஎச்ஜி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உடனடியாக வவுச்சர் தொகையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## புளிய மரங்கள்

இந்த புளிய மரங்கள் மெதுவாக வளரகூடியதுஇ அதிக நாள் வாழக்கூடியது, இந்த பெருத்த மரங்கள் தக்க சூழலில் 80 முதல் 100 அடி உயரம் வளரக்கூடியது (24–30மீ) 40 அடி (12மீ) படர்ந்து அதன் அடிதண்டு 25 அடி (7.5மீ) சுற்றளவு கொண்டிருக்கும் தன்மையுடையது.

பலவகை மண்வளங்களையும் இம்மரம் தாக்குபிடிக்கும் வண்டல் மண் முதல் பாளை நிலம் மற்றும் துவாரங்கள் நிறைந்த சுன்னாம்பு மண்வகை வரை தாங்கும். கடற்கறை அருகிலும் வளரக்கூடியவை.

புளிய மர விதைகள் மாதகணக்கில் பயன்படும். பயிரிட்ட ஒரு வாரத்தில் முளையிட ஆரம்பிக்கும். கடந்த காலத்தில் விதைகள் இனம்பெருக்கும் செய்யும் வகையில் விதைக்கப்பட்டு முட்செடிகள் சுற்றி வைக்கப்பட்டு பாதுகாப்புடன் வளர்க்கப்பட்டது. ஆனால் இன்று நர்சரியில் இளம் நாற்றுகள் வளர்க்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட இனவகைகயில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டுவதற்கு காரணம் இதிலிருந்து கிடைக்கும் வருமானம். இம்மரங்கள் கிளைகள் அல்லது ஷீல்டு பட்டிங், சைரு வினீர் கிராப்டிங் அல்லது ஏர் லேயரிங் மூலம் எளிதாக வளர்க்கப்பட கூடியது.

நர்சரியில் வளரும் மரங்கள் மழைகாலத்திற்கு முன் இடமாற்றி பயிரி செய்யப்படுகிறது. அடுத்த மழைகாலம் வரை வைத்திருந்தால் இந்த மரத்தில் ஆணிவேர் கத்தரித்துவிட வேண்டும். இடைவெளியானது ஒவ்வொரு மரத்திற்கிடையில் 33 முதல் 65 அடி (10 – 20m) இருக்கவேண்டும், மண்வளத்தை பொறுத்தும் அமையலாம். போதிய அளவு தண்ணீரும், ஒழுங்காக களைஎடுப்பதுமாக பராமரித்தால் விதைநாற்றுகள் 2 அடி (60cm) வரை முதல் வருடத்தில் வளர்ந்து, இரண்டாவது வருடத்தில் 4 அடி (120 cm) வரை வளரும்.

Harvesters may merely shake the branches to cause mature fruits to fall and they leave the remainder to fall naturally when ripe.

A mature tree may annually produce 150-225 kg.

## Job Opportunity

There are few vacancies in TIST India like, Quantifier & Coordinator. Interested members may meet your TIST Officials. You can also introduce your relatives and friends for these jobs, but they should join with TIST as Small Groups before taking up the responsibilities of a Quantifier or Coordinator.

அறுவடையாளர்கள் மரத்தின் கிளைகளை அசைத்தால் முதிர்ந்து கனிந்த பழங்கள் உதிர்ந்து மற்றவை கனிந்தபின் இயற்கையாகவே விழுந்துவிடும்.

ஒரு முதிர்ந்த மரம் வருடத்திற்கு 150 முதல் 225 கிலோ புளி கொடுக்க வல்லது.

## வேலை வாய்ப்பு

டிஜஎஸ்டி இந்தியாவில் உள்ள காலியாக இருக்கும் பணி இடங்கள் – ஆய்வாளர் / கணக்கெடுப்பாளர் மற்றும் ஒருங்கினைப்பாளர். விருப்பம் உள்ள அங்கத்தினர் உங்களின் டிஜஎஸ்டி அதிகாரிகளை சந்தியுங்கள். உங்களின் உறவினர்களையும், நண்பர்களையும் இந்த பணி இடங்களுக்காக அறிமுகப்படுத்தலாம். ஆனால் அவர்கள் சிறு குழுக்களில் சேர்ந்த பின்பே கணக்கெடுப்பாள் / ஒருங்கினைப்பாளராக பொறுப்பு ஏற்றுக்கொள்ள இயலும்.

## நோட் கூட்ட அட்டவணை

| நோடு | உட்பட்ட கிராமங்கள் | நோட் மையம் | கிழமை | காலம் | நேரம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | முதல் | வரை |
| வாசி மற்றும் மேல் கொடுங்கலூர் | சிங்கப்பள்ளி உளுந்தை மேல் கொடுங்கலூர் காட்டுக்கொல்லி | வன்தவாசி, மேல் கொடுங்கலூர் குன்னவாக்கம் | முதல் சனி<br>06.05.2006<br>03.06.2006 | மாலை<br>மாலை | 3.00<br>5.30 | 5.00<br>7.30 |
| பெருவளையம் | பெருவளையம் மேலாப்புலம், மோட்டூர் | மேலாப்புலம் | இரண்டாவது சனி<br>13.05.2006<br>10.06.2006 | காலை | 9.00 | 11.00 |
| கட்டியாம்பந்தல் | கட்டியாம்பந்தல் வெள்ளப்புத்தூர் | கட்டியாம்பந்தல் | இரண்டாவது ஞாயிறு<br>14.05.2006<br>11.06.2006 | காலை | 9.00 | 12.00 |
| சித்தூர் | சீராநல்லூர், சித்தூர், நந்திமேடு, மொளச்சூர்,. ஆட்டுப்புத்தூர் சிங்காடிவாக்கம் மருதம், ஜம்போதை | மொளச்சூர் மருதம், ஜம்போதை | மூன்றாவது ஞாயிறு<br>21.05.2006<br>18.06.2006 | காலை | 8.30 | 10.30 |
| காந்தூர் | சோகண்டி காந்தூர் | மொளச்சூர் | மூன்றாவது ஞாயிறு<br>21.05.2006<br>18.06.2006 | காலை | 11.00 | 01.00 |
| ஆண்டிச்சிறு வல்லூர் | வேடல், சிறுவல்லூர் ஆண்டிச்செருவல்லூர் கொட்டவாக்கம் மேல்ப்படவூர், சிறுவல்லூர், மேட்டுக்காலனி | வேடல் | நான்காவது சனி<br>27.05.2006<br>24.06.2006 | மாலை | 3.00 | 5.00 |



TIST

**TIST India** : New No.52, Guru Ram Flats, Flat D, Venkat Ratnam Nagar, Adyar 600 020. Phone : 044 24411637, Mobile : 9840299822, Web: www.tist.org

**TIST USA** : Mr.N.Ramesh, Phone : 001 9188511917
Email : rameshn@tist.com